2013 பிப்ரவரி 7]

30—

மாணவர் விடுதி

*14088—திரு. டி. செங்குட்டுவன்:

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் மேற்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேப்பனஹள்ளி தொகுதி, உத்தனப்பள்ளியில் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை மூலமாக மாணவர் விடுதி அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. அ. முகம்மத்ஜான், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக மக்களுக்கு தொடர்ந்து பல நல்ல திட்டங்களை வழங்குவதன்மூலம் மக்களின் வாழ்வாதாரம் முன்னேற பாடுபட்டு வரும், பொற்கால ஆட்சி அளித்து வரும் நமது பொற்கால முதல்வர் அனைத்துத் தரப்பு மக்களுக்கும் சிறந்த பாதுகாவலராகவும், அவர்களது தன்மானத்தைக் காக்கும் சமூக நீதி காத்த சிறந்த வீராங்கனையாகவும் (மேசையைத் தட்டும் ஒலி) இஸ்லாமியர்களின் முக்கிய கடமையான புனித ஹஜ் பயணம் சிறப்பாக விளங்கிட அதற்கென சிறப்பாக தமிழ்நாடு மாநில ஹஜ் குழுவை அமைத்து, அதற்கு இந்த எளிய தொண்டனான என்னை தலைவராக்கிய எங்கள் பொன்மனத் தலைவி, நாளைய பாரதப் பிரதமர் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு (மேசையைத் தட்டும் ஒலி) என் மனமார்ந்த, கோடானுகோடி நன்றியினை காணிக்கையாக்கி என்னுடைய பதிலை அளிக்க விழைகிறேன்.

(அ) மற்றும் (ஆ) வேப்பனஹள்ளி தொகுதி, உத்தனப்பள்ளியில் பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதி துவக்குவது குறித்த கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. செங்குட்டுவன் அவர்கள்.

திரு. டி. செங்குட்டுவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேப்பனஹள்ளி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட உத்தனபள்ளியில் அரசு மேல்நிலைப் பள்ளி இயங்கி வருகின்றது. சுமார் 1,100 மாணவ மாணவியர்கள் அங்கே கல்வி பயின்று வருகிறார்கள். மேற்படி உத்தனபள்ளியில் இருந்து சுமார் 5, 10 கி.மீ. தொலைவிலுள்ள கொம்மேபள்ளி ஊராட்சி, தானுமா ஊராட்சி, துப்புகானப்பள்ளி ஊராட்சி, பிட்ஜேபள்ளி ஊராட்சி, உத்தனபள்ளி சுற்றுவட்டாரப் பகுதிகள், நாகமங்கலம் ஊராட்சி உட்பட பல்வேறு பகுதிகளில் இருந்து அந்தப் பள்ளிக்கு மாணவர்கள் வந்து கல்வி பயில்கின்றனர். தினந்தோறும் நடந்தே சென்று கல்வி பயின்று வருகிறார்கள். காட்டோரமாக இருக்கிற, மலைப் பகுதியாக இருக்கிற அந்த ஊராட்சிப் பகுதிகளிலேயிருந்து மாணவர்கள் எல்லாம் தினந்தோறும் வந்து செல்கிறார்கள். சமீபகாலமாக கிருஷ்ணகிரி மாவட்டத்தில் என்னுடைய தொகுதியான வேப்பனஹள்ளி, உத்தனபள்ளி பகுதிகளில் கர்நாடக மாநிலத்திலிருந்து கூட்டம் கூட்டமாக யானைகள் வந்து நடமாடிக் கொண்டிருக்கின்றன. அதனால், குழந்தைகள் எல்லாம் பள்ளிக்குச் செல்வதற்கு அச்சப்படுகின்ற ஒரு சூழ்நிலை ஏற்படுகிறது. ஆகவே, உத்தனபள்ளியை மையமாகக்கொண்டு பிற்படுத்தப்பட்டோர் மாணவர் விடுதியைக் கட்டித் தருவதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதை பேரவைத் தலைவர்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. அ. முஹம்மத்ஜான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணகிரி மாவட்டத்தில் தற்போது 39 விடுதிகள் இயங்கி வருகின்றன. அதிலும் கேட்காமலேயே கொடுக்கும் வள்ளல் நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், 2012-2013 ஆம் ஆண்டில் மிகவும் பின்தங்கிய மாவட்டமான கிருஷ்ணகிரி மாவட்டத்தில் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் கல்லூரி மாணவியர் விடுதி ஒன்றும், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பாலிடெக்னிக் மாணவியர் விடுதி ஒன்றும் துவக்க ஆணையிட்டுள்ளார்கள். அதிலும் ஒவ்வொரு விடுதியிலும் 100 மாணவிகள் தங்குவதற்கு ஆணையிட்டுள்ளார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்கின்ற வேப்பனஹள்ளி

தொகுதியில் அவசியம் இருந்தால், விடுதிகள் தேவைப்படுகின்ற காலகட்டத்தில் மாண்புமிகு அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள்மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. செங்குட்டுவன் அவர்கள்.*

திரு. டி. செங்குட்டுவன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களை பணிவோடு கேட்டுக்கொள்வதெல்லாம், அந்தப் பகுதியில் இன்றைய சூழ்நிலையில், யானைகள் நடமாட்டம் அதிகமாக இருக்கிற சூழ்நிலையில் சுமார் 10 கி.மீ. அளவிற்கு ஒருமுறை விட்டால் அடுத்து உத்தனபள்ளி வரையிலும் சுமார் 15 கி.மீ. அளவிற்கு எந்த மாணவர்கள் விடுதியும் கிடையாது. அதேபோல, உத்தனப்பள்ளியைச் சுற்றியிருக்கிற மக்கள் மிகவும் கல்வியறிவு இல்லாத மக்கள் அந்தப் பகுதியில் இருக்கக்கூடிய மாணவர்கள் பள்ளியை முடித்து வீட்டிற்குப் போனால் மீண்டும் வீட்டிலிருந்து பள்ளிக்குச் செல்வதற்கு பயந்துகொண்டு இருக்கிற சூழ்நிலையில் இருக்கிறார்கள். ஆகவே, உத்தனபள்ளியை மையமாகக்கொண்டு ஒரு மாணவியர் விடுதியைக் கட்டித்தருவதற்கு முயற்சி செய்வார்களா என மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. அ. முகம்மதுஜான்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள் விடைகள் முடிவுற்றன.*

[**குறிப்பு:** *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.*]